RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 225 | ஆகஸ்டு.17 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் நான்காம் சுற்று இருமை முறை வகைத் தர மதிப்பீட்டில்
A++ (CGPA:3.59) தகுதி, பல்கலைக்கழக மானியக் குழுவின்
முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதி பெற்றது.)
2024 : NIRF : 47, 2024 : THE - Asia : 251-300, THE - World Young Universities : 201-250
2024 : QS India : 32, QS South Asia : 59, QS Asia : 271 - 280 )

காரைக்குடி - 630 003



அன்புடையீர்,
வணக்கம்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆவணித் திங்கள் 2-ஆம் நாள் (18.08.2025) திங்கட்கிழமை, பகல் 11.00 மணியளவில்

அழகப்பா பல்கலைக்கழகத்தின்

## 36-வது பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் கலையரங்கில் சிறப்புற நடைபெறும்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்

திரு. **ஆர்.என். ரவி** அவர்கள்

வேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம்

தலைமையேற்று பட்டமளித்திட அன்புடன் இசைந்துள்ளார்கள்

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

முனைவர் **கோவி. செழியன்** அவர்கள்

இணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம்

விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்

முனைவர். **வி. நாராயணன்** அவர்கள்

தலைவர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், பெங்களூரு மற்றும்
செயலாளர், விண்வெளித்துறை, இந்திய அரசு

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு
பட்டமளிப்பு விழாப் பேருரையாற்ற அன்புடன் இசைந்துள்ளார்கள்

இவ்விழாவிற்குத் தாங்கள் வருகை புரிந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்

முனைவர். அ. செந்தில்ராஜன்
பதிவாளர்

பேரா. க. ரவி
துணைவேந்தர்

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

## பெசண்ட் நகரில் மக்களை காப்போம்ழ் தமிழகத்தை மீட்போம் என்பதை வலியுறுத்தி தென்சென்னை கிழக்கு மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் மாபெரும் மாராத்தான் போட்டி

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதில் முதல் 3 இடங்களை பிடித்த பெண்கள் மற்றும் ஆண்களுக்கு ரூ.1 லட்சம் ரொக்க பரிசு



சென்னை, ஆக.17-

தென் சென்னை கிழக்கு மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமியின் பிறந்தநாளை முன்னிட்டு மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற முழகத்தோடு மாபெரும் மாராத்தான் போட்டி மாணவரணி தலைவர் கி.பிரான்சிஸ் தலைமையில் நடைப்பெற்றது.

நிகழ்ச்சிக்கு தென்சென்னை கிழக்கு மாவட்ட செயலாரும், வேளச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.கே.அசோக் கொடியசைத்து மாராத்தன் போட்டியினை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சி ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஓடினர்.

பெசண்ட் நகர் ராஜாஜி மாளிகை முன்பு தொடங்கிய மாராத்தன் போட்டி 5 கி.மீ தூரம் வரை ஆர்வத்துடன் ஓடினர்.

முதல் 3 இடங்களை பிடித்த பெண்கள் மற்றும் ஆண்களுக்கு மொத்தம் ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசு, பதக்கம், சான்றிதழ்கள் ஆகியவை வழஙகப்பட்டது. மேலும் கலந்து போட்டியாளர் அனைவருக்கும் சான்றிதழ் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் நாடார் பாதுகாப்பு பேரவை தலைவர் இ.எம்.சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மானாமதுரை ரயில்வே சந்திப்பு நிலையம் எதிரே உள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்று 79 வது (ஆகஸ்ட் 15) சுதந்திர தின விழாவை முன்னிட்டு சேலை மடித்தல் மற்றும் வாலிபால் போட்டி நடைபெற்றது இந்த போட்டியில் நான்கு அணிகள் பங்கேற்றன முதல் பரிசு இடைக்காட்டூர் வாலிபால் அணியினர் பெற்றுச் சென்றனர். சேலை மடிப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசு ரயில்வே நிலைய மேலாளர் குமாரசாமி வழங்கினார் இந்நிகழ்வில் இருப்பு பாதை காவல் சார்பு ஆய்வாளர் துரை பத்திர எழுத்தர் தனபால், சேவை கரங்கள் நண்பர்கள் சேது, முரளி திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி நகர அமைப்பாளர் செல்லப்பாண்டி காவல்துறை சிங்காரம் மற்றும் அனுமந்த ராவ் பொதுமக்கள் இளைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



## முடிச்சூரில் சிவா விஷ்ணு நகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் 79ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது

முடிச்சூர், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர் ஊராட்சியில் சிவா விஷ்ணு நகர் குடியிருப்பு நல சங்கம் சார்பில் 79ஆவது ஆண்டு சுதந்திர தின விழா குடியிருப்போர் நல சங்கம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா தலைவர் பா.தவமணி, தலைமையில் குடியிருப்பு நல சங்கச் செயலாளர் ஆர்.ஏ.ஜெயசீலன் வரவேற்பிலும் துணைத் தலைவர் சந்தானகிருஷ்ணன், தணிக்கையாளர் சி.இலட்சுமணன், துணைச் செயலாளர் ஆர்.கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக குடியிருப்போர் நல சங்கம் மகளிர் அணி செயலாளர் அபிராமி மோகனரங்கன் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்து அதனை தொடர்ந்து சாஸ்தா சாரிடபுள் ட்ரஸ்ட் தலைவர் மற்றும் முன்னாள் விமானப்படை வீரர் கே.சபாபதி கலந்துகொண்டு தேசியக்கொடி ஏற்றி சிறப்புரையாற்றினார் விஷ்ணு நகர் முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்களுக்கு சேலை,சட்டை, முககவசம் கையுறை ஆகியவற்றை வழங்கி பாராட்டினார்.

இறுதியில் குடியிருப்போர் நல சங்கம் பொருளாளர் ஏ.இளங்கோவன் நன்றியுரை ஆற்றினார்





வேலூர், தோட்டப்பாளையம், ஸ்ரீ நாராயண மண்டபத்தில், இந்து சமய அறநிலைத்துறை சார்பில்

## 79ம் சுதந்திர தின விழா முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து, சமபந்தி போஜன நிகழ்ச்சி

வேலூர், ஆக.17-

வேலூர் மாவட்டம், தோட்டப்பாளையம், ஸ்ரீ நாராயண ரெட்டியார் மண்டபத்தில், இந்து சமய அறநிலைத்துறை சார்பில் 79ம் சுதந்திர தின விழா முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து, சமபந்தி போஜன நிகழ்ச்சி, ஸ்ரீ நாராயண ரெட்டியார் சத்திரத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுதந்திரதின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் மாமன்ற உறுப்பினரும் மண்டல குழு தலைவருமான நரேந்திரன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ரா.அருணாச்சலம், நா.சுகுமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் காஞ்சனா கிருஷ்ணமுர்த்தி, தர்வம்பாள் குப்புசாமி, வி.எஸ்.முருகன் மற்றும் பகுதிவாழ் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த பொது விருந்திற்கு சிறப்பான முறையில் சத்திரத்தின் செயல் அலுவலர் மு. பாலசுப்ரமணி, பணியாளர்கள் சபரிநாதன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஏற்பாடுகள் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாபா மெட்ரிக் பள்ளியில் 79வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்



மானாமதுரை, ஆக.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று 79வது சுதந்திர தினம் மிகுந்த உற்சாகத்துடன் மற்றும் தேசப்பற்று உணர்வுடன் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக பள்ளியின் தாளாளர் கபிலன் மற்றும் பள்ளியின் நிர்வாகி மீனாட்சி வருகை தந்திருந்தனர், பள்ளியின் நிர்வாகி மீனாட்சி தேசியக் கொடியை ஏற்ற, அனைவரும் கொடி பாடல் பாடுவதன் மூலம் இவ்விழா தொடங்கியது. மாணவர்களின் அணி வகுப்பு சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்கள் தேசப்பற்று பாடல்கள், நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய நடனங்கள், உரைகள் போன்ற பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளை வழங்கினர். பள்ளி வளாகம் திரைவண்ணக் கொடிகளாலும், அழகிய அலங்காரங்களாலும் சிறப்பாக அலங்கரிக் கப்பட்டது.

முதல்வர் சாரதா உரையில், ஒற்றுமை, ஒழுக்கம், பொறுப்பு போன்ற நாட்டு மதிப்புகளை மாணவர்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும் என ஊக்குவித்தார். மாணவர்கள் வேலு நாச்சியார்,காந்தி, நேரு,குயிலி போன்ற வேடங்கள் அணிந்து அவர்களின் வரலாறு மற்றும் வீரத்தை பற்றியும் எடுத்துரைத்தனர்.

மானாமதுரையில் உள்ள காந்தி சிலைக்கு பள்ளியின் தாளாளர், நிர்வாகி,முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நேரில் சென்று காந்தியின் சிலைக்கு மரியாதை செலுத்தியும் உரையாடல்கள் நடத்தியும் தேசப்பற்றை வெளிக் காட்டினர். பள்ளியின் தாளாளர் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.பள்ளியின் தாளாளர் கபிலன் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அனைத்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டு தேசிய கீதத்துடன் விழா நிறைவுற்றது.

## விஜய் களத்திற்கு வந்து மக்களை சந்திக்கணும்: பிரேமலதா அட்வைஸ்

திருச்செங்கோடு, ஆக.17-

விஜய் களத்திற்கு வந்து மக்களை சந்திக்க வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த தெரிவித்தார். திருச்செங்கோட்டில் தேமுதிக கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. பொதுச்செயலாளர் பிரேமலதா பங்கேற்று, பேசினார். பின்னர், பிரேமலதா அளித்த பேட்டி: ஜனவரி மாதம் நடக்கும் கட்சி மாநாட்டில், தொண்டர்கள் விரும்பும் மெகா கூட்டணி குறித்து அறிவிப்பு வெளியாகும்.

தேமுதிக எந்த கூட்டணியில் உள்ளதோ, அந்த கூட்டணி வெற்றி கூட்டணியாக இருக்கும். விஜய் களத்திற்கு வர வேண்டும். மக்களை சந்திக்க வேண்டும். நான் தினமும் செய்தியாளர்களை சந்திக்கிறேன். அதுபோல் அவர் செய்தியாளர்களை சந்தித்து, தனது செயல்பாடுகள் குறித்து விளக்கி கூற வேண்டும். தூய்மை பணியாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள காலை உணவு திட்டம், காப்பீடு திட்டம், இறந்தவர்களுக்கு 10 லட்ச ரூபாய் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் வரவேற்கிறோம். இவ்வாறு பிரேமலதா கூறினார்.





■ மதுரை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் தேசியகொடியை ஏற்றி வைத்து காவல்துறை அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கே.அர்விந்த் இ.கா.ப., அவர்கள் அவர்கள் உடன் உள்ளார்.

## சாமி கும்பிடுவதில் ஏற்படும் பிரச்சனை : பட்டியலின மக்களுக்கு நீதி கிடைக்குமா?





மானாமதுரை ஆக.17

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் எம்.கரிசல்குளம் கிராமத்தில் பட்டியல் இனத்தைச் சேர்ந்த தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் என்று இரு பிரிவினர் வசித்து வருகின்றனர் இருவருக்கும் பொதுவாக அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் உள்ளது இங்கு சாமி கும்பிடுவதில் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது இதனால் பட்டியல் இனத்தைச் சேர்ந்த மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் கடந்த 11/08/2025 மனு அளித்தனர் அந்த மனுவில் என்னவென்றால் எம். கரிசல்குளம் கிராமத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்த (தேவேந்திர குல வேளாளர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்கு பொதுவாக முத்து மாரியம்மன் கோவில் உள்ளது ஒரு தரப்பினர் சாமி கும்பிட வந்தால் மறுபிறப்பினர் வரக்கூடாது என வாய் தகராறு முதலில் ஏற்பட்டுள்ளது பின்னர் அவர் கைகலப்பாக மாறி அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கடந்த 25/07/2016,20/06/2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் இரண்டு சமூகமும் தனித்தனியாக சாமி கும்பிடலாம் என்று இரண்டு சமூகமும் கையொப்பம் போட்டது விளைவாக பட்டியல் இனத்தைச் சேர்ந்த தேவேந்திரகுல வேளாளர் இரண்டு முறையும் பிற்படுத்தப்பட்டோர் சமூகம் மூன்று முறையும் சாமி கும்பிட்டார்கள் பட்டியல் இனத்தைச் சேர்ந்த மக்கள் மூன்றாவது முறையாக சாமி கும்பிட போகும்போது எதிர்த் தரப்பினர் சாமி கும்பிட விடாமல் தடுத்துள்ளனர் இதனால் பட்டியல் இனத்தைச் சேர்ந்த மக்கள் மாவட்ட உரிமையை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கு எண் 81/2017 அந்த வழக்கும் தள்ளுபடி ஆகிவிட்டது அதன் பின்னர் முத்துமாரியம்மன் கோவிலின் எதிர்ப்புறம் 10அடி தூரம் புறம்போக்கு இடத்தில் பட்டா வாங்கி கோயில் சூலாயுதம் எடுத்து வந்து சாமி கும்பிட முயற்சித்துள்ளனர் இதனால் பட்டியல் இனத்து மக்கள் கோவிலில் இருந்து 10 அடி தூரத்தில் கோயிலை பிரித்துச் செல்ல வேண்டாம் என்று கூறவே நீங்க என்ன சொல்றது நாங்க என்ன கேட்கிறது என்ற பாணியில் பட்டியல் இனத்து மக்களை அரிவாள் கம்பு போன்ற ஆயுதங்களால் ஆண் பெண் என்று பாராமல் அனைவரையும் தாக்கியுள்ளனர்.

தற்போது அது பிசிஆர் வழக்காக சிவகங்கை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது இந்த வழக்கில் மூன்று நபர்கள் சாட்சி சொல்லிவிட்டனர் இன்னும் மற்றவர்கள் சாட்சி சொல்லவில்லை இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் நீதிமன்ற ஆணை வாங்கி விட்டனர் பட்டியல் இனத்து மக்கள் கோவிலில் சாமி கும்பிட போவதாக தகவல் கிடைத்ததை வைத்து மானாமதுரை டிஎஸ்பி இடம் மனு அளித்துள்ளனர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் வருகின்ற 12/08/2025 பி சி ஆர் வழக்கு நடந்து கொண்டிருக்கும் அந்த இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தைச் சார்ந்த மக்கள் பொங்கல் வைக்க திட்டமிட்டுள்ளனர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தும் எவ்விதமான நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மாவட்ட நிர்வாகமும் மாவட்ட காவல்துறைமும் இந்த சமூகம் சார்ந்த மக்களுக்கு உறுதுணையாக இருப்பார்களா என்று கேள்வி எழுந்துள்ளது

## பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்டத்தில் செயற்பட்டுவரும் அனைத்துப்பள்ளிகள் மற்றும் அனைத்து கல்லூரிகளில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கான பேச்சுப்போட்டிகள் தனித்தனியே, வருகின்ற 21.8.2025 மற்றும் 22.8.2025 அன்று நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.17-

தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான அண்ணல் காந்தியடிகள், சவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு, ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்தில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்களுக்கு வருகின்ற 21.8.2025 (வியாழன்) அன்றும், தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்களுக்கு வருகின்ற 22.8.2025 (வெள்ளி) அன்றும் பேச்சுப் போட்டிகள் சிவகங்கை, மருதுபாண்டியர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகக்கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் பேச்சுப் போட்டியில் பள்ளி மாணாக்கர்களுக்கு 1. அண்ணாவின் மேடைத் தமிழ், 2. எழுத்தாளராக அண்ணா, 3. சமூக நீதிக்கான அண்ணாவின் கொள்கைகள் ஆகிய தலைப்புகளும், கல்லூரி மாணாக்கர்களுக்கு 1. சட்டமன்றத்தில் அண்ணா, 2. பேரறிஞர் அண்ணாவின் சமுதாயச் சிந்தனைகள், 3. தமிழும் அண்ணாவும் ஆகிய தலைப்புகளும் மற்றும் தந்தை பெரியார் பிறந்தநாள் பேச்சுப்போட்டியில் பள்ளி மாணாக்கர்களுக்கு 1. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள், 2. சுயமரியாதை இயக்கம்,3. பெரியாரும், பெண் விடுதலையும் ஆகிய தலைப்புகளும், கல்லூரி மாணாக்கர்களுக்கான போட்டியில் 1. தந்தை பெரியாரும், மூடநம்பிக்கை ஒழிப்பும், 2. பெரியாரின் எழுத்துப்பணி, 3. பெரியாரின் சமூகத் சீர்திருத்தங்கள் ஆகியவை போட்டிகளின் தலைப்புகளாக நடத்தப்படவுள்ளது.

மேலும், மாவட்ட அளவில் நடத்தப் பெறும் இப்போட்டியில் பங்கு பெற்று, வெற்றிபெறும் பள்ளி, கல்லூரி மாணாக் கர்களுக்கு தனித்தனியே முதல் பரிசாக ரூ.5,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/மும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் பள்ளி மாணாக்கர்களுக்கான பேச்சுப்போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுள் அரசு பள்ளி மாணாக்கர்கள் இருவரை மட்டும் தெரிவு செய்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் சிறப்பு பரிசுத்தொகையாக ரூ.2,000/ வீதமும் வழங்கப்படவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் (ஒவ்வொரு பள்ளி, கல்லூரியிலிருந்து ஒருவர் மட்டும்) இப்பேச்சுப்போட்டியில் பங்கேற்கலாம்.

போட்டி நேரத்தில் மாணாக்கர்களுக்கு குலுக்கல் முறையில் தலைப்பு ஒதுக்கீடு செய்யப்பெற்று, அத்தலைப்பிலேயே மாணாக்கர்கள் பேச வேண்டும். எந்தத்தலைப்பு வரப்பெற்றாலும் பேசுவதற்கு ஏற்றவாறு, அனைத்து தலைப்புகளிலும் பேசுவதற்கு மாணாக்கர்கள் தயார் செய்துகொள்ள வேண்டும். போட்டிகள் குறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் பங்கேற்புப் படிவம் ஆகியவை பள்ளிகளுக்கு முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாகவும், கல்லூரிகளுக்கு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்/ கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கேற்கும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் பள்ளித் தலைமையாசிரியர், கல்லூரி முதல்வரிடம் பங்கேற்புப்படிவத்தில் ஒப்பம் பெற்று போட்டி நாளன்று தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநரிடம் நேரில் அளித்திடல் வேண்டும்.

கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயற்பட்டு வரும், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது 04575 241487 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.





## "இசையோடு ருசியோடு விளையாடு" நம்ம ஊரு திருவிழா! நமக்கான பெருவிழா! ஆணையாளர் சித்ரா விஜயன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, ஆக.17-

மதுரை மாநகராட்சி மற்றும் ஹலோ ஈவன்ட்ஸ் இணைந்து தமுக்கம் மைதானத்தில் இசையோடு ருசியோடு விளையாடு நம்ம ஊரு திருவிழா, நமக்கான பெருவிழாவினை மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

மதுரை மாநகராட்சி மற்றும் ஹலோ ஈவன்ட்ஸ் இணைந்து தமுக்கம் மைதானத்தில் 15.08.2025 முதல் 17.08.2025 வரை மாலை 4 மணி முதல் 9 மணி வரை மூன்று நாட்கள் "இசையோடு ருசியோடு விளையாடு நம்ம ஊரு திருவிழா, நமக்கான பெருவிழா" என்ற தலைப்பில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இசையோடு ருசியோடு விளையாடு நிகழ்வின் தொடக்க விழாவினை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தொடங்கி வைத்து இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார்கள். இன்றைய நிகழ்வில் குழந்தைகளுக்கான மாறுவேட போட்டி, கொழு கொழு குழந்தைகள் போட்டி மற்றும் பாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் பல்வேறு குழந்தைகள் கலந்து கொண்டு தங்களை திறமைகளை வெளிப்படுத்தினார்கள். மேலும் பல்வேறு போட்டிகள் நாளை மற்றும் நாளை மறுநாள் தொடர்ந்து நடைபெற இருக்கிறது. வெற்றி பெற்றவர் களுக்கு பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன் ஹலோ ஈவண்ட்ஸ் நிறுவனர் திரு.செந்தில், டெம்பிள் சிட்டி ஹோட்டல் உரிமையாளர் திரு.குமார், தனியார் பங்களிப்பார்கள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள், குழந்தைகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## காஞ்சிபுரம் பட்டு பூங்காவில் வேர்களை தேடி திட்டம்: 95 அயலக தமிழ் இளைஞர்கள் பங்கேற்பு

காஞ்சிபுரம், ஆக.17-

தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வகையில், வேர்களை தேடி திட்டத்தின் கீழ் கலை மற்றும் கலாச்சாரத்தினை அயலக தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையில், 14 நாடுகளை சார்ந்த 95 அயலக தமிழ் இளைஞர்கள், நேற்று முன்தினம் சுற்றுலா பயணமாக காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கதிர்பூரில் உள்ள அண்ணா கைத்தறி பட்டு பூங்காவினை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர்.

இதனைத்தொடர்ந்து, பட்டு கைத்தறி நெசவாளர்களுடன் கலந்துரையாடி, பட்டு சேலைகள் நெசவு செய்யும் முறை குறித்து கேட்டறிந்தார்கள். இவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், சுற்றுலாத்துறை சார்பாகவும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இப்பயணத்தில், பங்குபெறும் அயலகத் தமிழ் இளைஞர்கள், அவர்களது நாட்டில் தமிழ்நாட்டின் கலாச்சார தூதுவர்களாக செயல்பட்டு தமிழர்களின் கலாச்சார பெருமைகளை அவர்களது நாடுகளில் பரப்புவர். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, சப்கலெக்டர் ஆஷிக் அலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் பாரதி, உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் ரமேஷ்பாபு, அரசு அலுவலர்கள், பட்டு நெசவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு







கன்னியாகுமரி, ஆக.17-

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிக ளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஊரகப்பகுதியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும், அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து திருவட்டார் வட்டத்துக் குட்பட்ட ஆலம்பாரி மலைவாழ் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவும், உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.





## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் சுதந்திர தின விழா

காரைக்குடி, ஆக.17-

இந்திய திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் சுதந்திர தின விழா நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி அவர்களின் வழிகாட்டுதலின்படி, கல்லூரியின் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரையாற்றினார். தேசிய மாணவர் படை மாணவர்களின் அணிவகுப்போடு நடைபெற்ற இவ்விழாவில் கொடிப் பாடல் பாடப்பட்டு, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்விழாவில் பேராசிரியர்களும் மாணவ மாணவியரும், அலுவலகப் பணியாளர்களும் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குநர் முனைவர் அசோக்குமார், தேசிய மாணவர் படையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் சுந்தரி, தெய்வமணி செந்தில்குமார்,லட்சுமண குமார், நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வமீனா , நுண்கலை மன்ற உறுப்பினர்கள் முனைவர் சர்மிளா, லெட்சுமணக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.




## பழனி முருகன் கோயிலுக்கு பக்தர்கள் கிரிவலப் பாதையில் செல்ல வசதியாக லலிதா ஜுவல்லரி சார்பாக பேட்டரி பேருந்து இலவசமாக வழங்கப்பட்டது

பழனி, ஆக.17-

பழனி முருகன் கோயிலில் கிரிவலப் பாதையில் பக்தர்களின் கார்கள் நான்கு சக்கர வாகனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கிரிவலப் பாதையில் உள்ள ரோப் கார் நிலையம், வின்ச் நிலையம் , பாத விநாயகர் கோவில் மற்றும் பிற கோயில்களுக்கு பக்தர்கள் சென்று வர வசதியாக கோயில் நிர்வாகம் பேட்டரி கார்களை இயக்கி வருகிறது. மூத்த குடிமக்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் பேட்டரி வாகனத்தில் ஏறி கிரிவலப் பாதையில் எளிதாக சென்று வருகின்றனர். இந்த நிலையில் சென்னை லலிதா ஜுவல்லரி சார்பில் 23 பேர் அமர்ந்து செல்லும் வகையில் பேட்டரி வாகனம் நன்கொடையாக வழங்கப்பட்டது. பழனி அடிவாரம் அருள்மிகு பாத விநாயகர் கோயில் முன்பு பேட்டரி வாகனத்துக்கு பூஜை செய்யப்பட்டு பக்தர்கள் வசதிக்காக இயக்கப்பட்டது. இதன் மூலம் பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் வசதிக்காக இயக்கப்படும் பேட்டரி வாகனங்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது.



■ வேலூர் மாவட்டம், வேலூர் நேதாஜி மைதானத்தில் நடைபெற்ற 79ம் சுதந்திர தினத்தை முன்னிட்டு (15.08.2025) அன்று வேலூர் நேதாஜி மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, அனைத்து அரசு துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பங்கேற்றார்

சிவகங்கை, ஆக.17-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் ஊராட்சியில், சுதந்திர தினவிழாவினை முன்னிட்டு, நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில், சிறப்பு பார்வையாளராக பங்கேற்று தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் சுதந்திர திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நமது முன்னோர்கள் உயிர் தியாகம் செய்து நமக்கு சுதந்திரம் பெற்று தந்துள்ளனர். அதனடிப்படையில் கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதி, விஞ்ஞானம் ஆகியவைகளில் வளர்ச்சி பெற்று, நாம் வளர்ச்சி பாதையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைய தினம், சுதந்திர தினவிழாவினை முன்னிட்டு, மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சி என்பது கிராமங்களின் வளர்ச்சியைப் பொருத்தே அமைகிறது.

அதன்படி, ஒவ்வொரு கிராமங்களிலும் பொதுமக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் கிராமங்கள் வளர்ச்சிக்கும் மற்றும் தேவையான திட்டங்கள் குறித்தும் எடுத்துரைப்பதற்கு கிராம சபைக் கூட்டங்கள் அடிப்படையாக அமைந்து, ஜனநாயகத்தின் மக்களாட்சிக்கான அடையாளமாகவும் திகழ்கிறது.

அதனடிப்படையில், தமிழகம் முழுவதும் வருடத்திற்கு 6 முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்திடும் அடிப்படையில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த தினமான அக்டோபர்





2, தொழிலாளர் தினமான மே 1, சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, குடியரசு தினமான ஜனவரி26, உள்ளாட்சிகள் தினமான நவம்பர் 1 மற்றும் உலக தண்ணீர் தினமான மார்ச் 22 என மேற்குறிப்பிட்ட 06 நாட்களில் கிராமச்சபைக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறாக நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில், ஒவ்வொரு கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், நடைபெற்று வரும் பணிகள், வரவுசெலவு கணக்குகள் ஆகியவைக் குறித்து பொதுமக்கள் கண்காணிப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

இவ்வூராட்சியில் கடந்த நான்கு ஆண்டு களில், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் அடிப்படை தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், அதனையும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள் அரசின் திட்டங்களை முறையாக அறிந்து கொண்டு, அத்திட்டங்களின் மூலம் பயன்பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கிராம சபைக் கூட்டத்தின் வாயிலாக, சாலை வசதி, பேருந்து வசதிகள், நியாய விலைக் கடைகள் மற்றும் புதிய பள்ளிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டு வசதிகள் குறித்து பொதுமக்கள் எடுத்துரைத்தன் அடிப்படையில், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கான உரிய அனுமதிகள் பெற்று மேற்கொள்ளக் கூடிய பணிகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், இக்கூட்டத்தின் நோக்கம், ஊராட்சிப் பகுதி முழுமையாக தன்னிறைவு பெறவேண்டும் என்பதேயானால், அந்தவகையில் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் பகுதியில் நடைபெறும் கிராமசபைக் கூட்டங்கள் மற்றும் சிறப்பு கிராமச்சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் முழுஅளவில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் முழுஅளவில் கலந்து கொண்டால்தான் உங்கள் பகுதிக்கு என்ன அடிப்படை தேவை என்பதை திட்டமிட்டு கலந்தாலோசித்து, பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, இதுபோன்ற கிராம சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் முழுஅளவில் கலந்து கொண்டு கிராமங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இவ்வூராட்சியை சார்ந்த 8 தூய்மை பணியாளர்களுக்கு அவர்களின் பணியை ஊக்குவிக்கின்ற வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும் பொன்னாடை அணிவித்து, பரிசுப்பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கா.பொற்கொடி வழங்கி, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று, அக்கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

முன்னதாக, அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த செயல்விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சிகளில், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு.இராஜேந்திர பிரசாத், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 17.8.2025



# கடையநல்லூர் நகராட்சியில் 79வது சுதந்திர தின விழா: நகர்மன்றத் தலைவர் தேசிய கொடி ஏற்றினார்

தென்காசி, ஆக.17-

தென்காசி கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் 79வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் நகராட்சி அலுவலகத்தில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்தார் அதனைத் தொடர்ந்து தேசிய கொடி ஏற்றிவைத்தார் நிகழ்ச்சியில் நகராட்சி மேலாளர் சண்முகவேல் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் பொறியாளர் மைதீன்அப்துல் காதர் உதவி பொறியாளர் அன்னம் வருவாய் அலுவலர் ராஜசேகர் நகரமைப்பு அலுவலர் பொன்னுச்சாமி கணக்கர் புஷ்பநாதன் நகர அமைப்பு ஆய்வாளர் அபினோ சுகாதார ஆய்வாளர்கள் சிவா மாதவராஜ் குமார் பணி ஆய்வாளர்கள் தாரகேஸ்வரி ப்ளீடா ஞானபாய் வரைவாளர் டிமான் முத்து அலுவலக இளநிலை உதவியாளர்கள் அலி பாத்திமா சண்முக சுந்தரி மகாலட்சுமி சசிரேகா தனலட்சுமி வேல் தாய் மகேஷ்வரி வருவாய் உதவியாளர்கள் பாஷா அருண் குமார் மற்றும் சாமிதுரை மாரியப்பன் மகளிர் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மனோகர் வீரபத்திரன் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அக்பர்அலி, ராமகிருஷ்ணன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினரும் நகர மன்ற உறுப்பினருமான ரா. முருகன் , மாலதி, தனலட்சுமி, எஸ்.டி.பி.ஐ யாஸர்கான் மற்றும் தூய்மை இந்தியா பரப்புரை யாளர்கள் முத்துமாரி மகேஷ் டெங்கு கொசு ஒழிப்பு திட்ட பணியாளர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் பள்ளியின் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது இதில் ஆசிரியர்கள் மாணவர்கள் , பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் 79வது சுதந்திர தின விழா மாவட்ட ஆட்சியர் கொடியேற்றி அணிவகுப்பு மரியாதை ஏற்று கொண்டார்

தென்காசி, ஆக.17-

தென்காசி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இசி ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ கே கமல் கிஷோர் தலைமையில் 79வது சுதந்திர தின விழா நடைபெற்றது மாவட்ட ஆட்சியர் தேசியக் கொடி ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என 342 பேர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ் அரவிந்த் தென்காசி துணை ஆட்சியர் வைஷ்ணவி பால் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார் சுதந்திரப் போராட்ட தியாகி லட்சுமி காந்தன் பாரதி(ஓய்வு) பொன்னாடை அணிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கௌரவித்தார் தென்காசி மாவட்ட வாத்திய இசை குழு முதல் நிலை காவலர் சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் வாத்திய இசை குழுவினர் முன் நின்று அழைத்துச் செல்ல காவல் ஆய்வாளர் திரு மார்டின் அவர்கள் தலைமை தாங்கி நடத்திய காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு புறாக்களையும் மூவர்ண பலூன்களையும் பறக்கச் செய்தார் அதனைத் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி அலுவலர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவித்தார் செய்தி மக்கள் தொடர்பு துறையில் இரண்டு அலுவலக பணியாளர்களுக்கும் உட்பட 348 பேர்களுக்கு பாராட்டு சான்றும் விருதுகளும் வழங்கி கௌரவித்தார் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் சாதனை படைத்த தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த தடகளப் போட்டியாளர்கள் பொன்னம்மாள் சுப்புலட்சுமி கவிதா ஸ்டீபன் மற்றும் பளுதூக்குதல் போட்டியாளர்கள் முகமது அபுபக்கர் முகமது அலி ரியாஸ் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார் 2024 25 ஆம் ஆண்டு சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு சிறந்த வங்கிக்கான விருதையும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஹெச்டிஎஃப்சி இந்தியன் வங்கி ஆகிய வங்கிகளுக்கு சிறந்த வங்கி கிளைகளுக்கான விருதுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டு திட்டம் ஆயுஷ்மான் பாரத் மந்தி திஜன் ஆரோக்கியா யோஜனா திட்டத்தின் கீழ் சிறந்த மருத்துவமனைக்கான விருதுகளை தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் சிறந்த நடைமுறை விருது மற்றும் சான்றிதழை கால்நடை உதவி மருத்துவர் ரமா தேவி அவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார் நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது கலந்து கொண்டு வெற்றி பெற்ற முதல் மூன்று பள்ளிகளுக்கு கேடயமும் மற்றைய பள்ளிகளுக்கு நினைவு பரிசினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார் அதனைத் தொடர்ந்து தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட வடக்கு ராதா வீதியில் உள்ள காந்தி சிலைக்கு மாவட்ட ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இவ்விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தண்டபாணி சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி கவிதா திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் திருமதி இந்திரா பிரியதர்ஷினி தென்காசி நகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச்செல்வி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன் யேசுராஜ் உதவி மக்கள் தொடர்பு (செய்தி) அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் அரச அலுவலர்கள் காவல்துறையினர் பள்ளி மாணவ மாணவிகள் ஆசியோர் கலந்து கொண்டனர்



# சுதந்திர தினத்தை முன்னிட்டு வேங்கடமங்கலம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

வேங்கடமங்கலம், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம் , காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட வேங்கடமங்கலம் முதல் நிலை ஊராட்சியில் (ஆகஸ்ட் 15) சுதந்திர தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடை பெற்றது. ஊராட்சி மன்ற தலைவர், கல்யாணி இரவி வேங்கடமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் தேசியக் கொடியை ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாடினர். தொடர்ந்து ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் கிராம சபை கூட்டம் ஊராட்சியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் கலந்து கொண்டு ஆலோசனை மற்றும் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஊராட்சி செயலர், வி. வளர்மதி மக்களின் கோரிக் கைகள் நிறைவேற்றப்பட்ட பட்டியல் விவரங்களை ஊராட்சி மக்களிடம் படித்து காண்பித்த பிறகு மீண்டும் பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து சிறப்பாக கிராம சபை கூட்டம் நடைபெற்றது. உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர்.





# வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் 79ம் சுதந்திர தின விழா

வேலூர், ஆக.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் 79ம் சுதந்திர தின விழா நடைபெற்றது. இவ்விழாவில் இந்தியாவின் முன்னணி இதயவியல் நிபுணரும், சி.எம்.சி. மருத் துவமனையைச் சார்ந்த மருத்துவர் டாக்டர். ஜார்ஜ் ஜோசப் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்த சுதந்திர தினவி ழாவில் வி.ஐ.டி. துணைத் தலை வர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவ நாதன், செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி, இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி மற்றும் விஜடி பல்கலைக் கழக அலுவ லர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து இனிப்புகள் வழங்கப்பட்டது.





## மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில்

# 79 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொடியேற்றி குழந்தைகளுக்கு நோட்டு பேனா சில பரிசு பொருள்கள் வழங்கப்பட்டன

திருச்சி, ஆக.17-

திருச்சி மாவட்டம் திருவரம்பூர் கீழமங்கவனம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் நிறுவன தலைவர் ராஜேஷ் ஆலோசனைப்படி மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் 79 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொடியேற்றி குழந்தைகளுக்கு நோட்டு பேனா சில பரிசு பொருள்கள் வழங்கப்பட்டன இதில் தலைமை ஆசிரியர் மோகனாம்பாள் ஆசிரியர் லிமா அமைப்பின் பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் விடிவெள்ளி பெண்கள் அமைப்பின் தலைவர் மருதம்பாள் செயலாளர் சீலிங் ராஜ் மக்கள் நல்வாழ் சமூக பாதுகாப்பு அமைப்பின் மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட துணைத்தலைவர் ஈஸ்வரி திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணை தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட மகளிர் அணி செயலாளர் ரேவதி திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமன் திருச்சி மாவட்ட மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் மற்றும் சத்யா மல்லீஸ்வரி ராஜேஸ்வரி செல்வி சஞ்சய் மற்றும் ஆசிரியர்கள் குழந்தைகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# சுதந்திர தினத்தை முன்னிட்டு பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பொன்மார், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம் , திருப்போரூர் ஒன்றியத்திற்குட்பட்ட பொன்மார் முதல் நிலை ஊராட்சியில் (ஆகஸ்ட் 15) சுதந்திர தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர், நாராயணன் ஊராட்சிக் குட்பட்ட அரசு பள்ளிகளில் தேசியக்கொடியை ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாடினர் போலச்சேரி அரசினர் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் சி. வெங்கடேஷ் உடன் இருந்தார். தொடர்ந்து ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் கிராம சபை கூட்டம் ஊராட்சியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் கலந்து கொண்டு ஆலோசனை மற்றும் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஊராட்சி செயலர், டி. காலே ஸ்வரி மக்களின் கோரிக் கைகள் நிறைவேற்றப்பட்ட பட்டியல் விவரங்களை ஊராட்சி மக்களிடம் படித்து காண்பித்த பிறகு மீண்டும் பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து சிறப்பாக கிராம சபை கூட்டம் நடைபெற்றது. உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர்.






# வேலூரில், 79ம் சுதந்திரதின விழா: செய்தித்துறை பிஆர்ஓ அலுவலக உதவியாளர் தரணிக்கு, ஆட்சியர் சிறந்த பணியாளருக்கான சான்று வழங்கி பாராட்டு

வேலூர், ஆக.17-

வேலூர் மாவட்டம், வேலூர் நேதாஜி மைதானத்தில் (15.08.2025) நடைபெற்ற 79ம் சுதந்திரதின விழாவில் சிறப்பாக பணியாற்றிய அரசு பணியாளர், செய்தித்துறையில் பி.ஆர்.ஓ. அலுவலக உதவியாளர் தரணிக்கு, மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வாழ்த்து தெரிவித்து, பாராட்டு சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட அளவிலான அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் தேசபக்தி மிகு. முன்னாள் ராணுவ வீரர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மக்கள் கருத்து நாளிதழ் சார்பாகவும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பாகவும், மாவட்ட அளவிலான அனைத்து செய்தியாளர்கள் சார்பாகவும் பி ஆர் ஓ அலுவலக உதவியாளர் தரணியின் பணி சிறக்க, பதவி உயர்வு பெற்றிட, மென்மேலும் புகழ் வளர்ந்திட வாழ்த்துகள் என வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.





■ தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகத்தில் தட்டச்சராக பணி புரியும் பரமேஸ்வரி இளநிலை உதவியாளராக பணி புரியும் சேகர் ஆகியோரின் சிறந்த சேவையை பாராட்டி தென்காசி மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் இருவரையும் பாராட்டி சான்றிதழ் வழங்கினார் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன் யேசுராஜ் செய்தி (உதவி) மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் ஆகியோர் இருவருக்கு பாராட்டு தெரிவித்து வாழ்த்து தெரிவித்தனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161